

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.3.2025) செங்கல்பட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 508 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 50,606 பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. வரலட்சுமி மதுசூதனன், எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த் ரமேஷ், எஸ்.எஸ். பாலாஜி, எம். பாபு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் டாக்டர் கே.எஸ். பழனிசாமி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். அருண்ராஜ், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பூர் | பிரணிதா பேலஸ், எத்திராஜ் சாமி சாலை, எருக்கஞ்சேரி, பெரம்பூர். |
| | மாலை 4.00 மணி | இராதாகிருஷ்ணன் நகர் | செல்வ வாணி மஹால், தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில். |
| 23.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | இராயபுரம் | ‘அறிவகம்’ திருமண மாளிகை, இராயபுரம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 11-03-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. ஏழைகளுக்கு துரோகம் செய்யும் மோடி அரசு!**

**பொள்ளாச்சி கே.ஈஸ்வரசாமி காட்டம்!**



கடந்த பத்தாண்டுகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ளவர்களை மேம்படுத்த எந்த முயற்சியும் ஒன்றிய பாஜக அரசு செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டி மக்களவையில் திமுக எம்.பி. கே. ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடு முழுவதும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை குறித்து ஒன்றிய அரசு கவலையில்லாமல் இருப்பதை குறிப்பிட்டு கடந்த இரண்டாண்டுகளில் இவ்வெண்ணிக்கை பலமடங்கு அதிகரிப்பதன் காரணங்களை அவர் கேட்டுள்ளார்.

மேலும் அம்மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த திட்டங்கள் வகுத்து உடனடியாக செயல்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

**2. மீனவர்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!**

**தமிழச்சி தங்கபாண்டியன் குற்றச்சாட்டு!**



தொடர்ந்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்வதும் படகுகளை பறித்துச் செல்வதும் வாடிக்கையாகிவிட்டது. தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையில் இதை குறித்து பேசுவது, ஒன்றிய அமைச்சர்களை நேரில் சந்தித்து மீனவர்கள் விடுதலை குறித்து வலியுறுத்துவது மட்டுமன்றி முதலமைச்சர் நேரடியாக கடிதம் எழுதுவது என அனைத்து விதமான நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

மேலும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்து மக்களவையில் தென்சென்னை திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

மீனவர்களின் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மீனவர் நலனில் அக்கறை கொண்டு, மீன்பிடி உட்கட்டமைப்பை மேம்படுத்த கடந்த மூன்றாண்டுகளில் ஒன்றிய அரசு செய்திருக்கும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப உதவிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடவேண்டும்.

மீனவர்களுக்கென்று அரசு காப்பீட்டுத் திட்டங்கள் உருவாக்கவேண்டும்

இதுவரை மீனவர் நலனுக்காக உருவாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதியின் விவரங்கள் குறித்தும் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

**3. செயல்படுகிறதா பிரதமரின் மீன்வளத்திட்டம்?**

**கள்ளக்குறிச்சி டி.மலையரசன் கேள்வி!**



மீனவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட பிரதமரின் மீன்வளத்திட்டம் செயல்படுவது குறித்து மக்களவையில் திமுக எம்.பி. டி. மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுவரை தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்ட செயல்திட்டங்கள் குறித்த விவரங்களை உடனையாக வழங்க வேண்டும். அதில் மீன் உற்பத்தி மற்றும் மீன்பிடி உட்கட்டமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்ட நிதியின் விவரங்களும் இத்திட்டத்தின்கீழ் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப உதவி வகையில் பயனடைந்த மீனவர்கள், மீன் பண்ணை உரிமையாளர்கள் மற்றும் பெண்கள் சுய உதவிக்குழுக்கள் குறித்த எண்ணிக்கை விவரங்களையும் வெளியிட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதோடு மழைக்காலங்களில் மீன்களை பதப்படுத்தும் கட்டமைப்புக்காக இதுவரை மேற்கொண்டுள்ள பணிகள் யாவை என்றும் ஏற்றுமதி வசதிகள் மற்றும் மீனவர் சமூகத்தின் வாழ்க்கைநிலையை மேம்படுத்தவும் இத்திட்டத்தில் ஏதேனும் செயல்திட்டத்திங்கள் உள்ளனவா எனவும் அவர் கேட்டுள்ளார்.

**4. உலகிற்கே நாகரீகத்தை கற்றுக்கொடுத்தவர்கள் தமிழர்கள்!**

**தென்காசி ராணி ஸ்ரீகுமார் பெருமிதம்!**



இன்று நாடாளுமன்றத்தில் மணிப்பூர் விவகாரத்தின் மீதான தனது உரையில் பெண்கள் பாதுகாப்பு குறித்து பேசிய தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீகுமார் ஒன்றிய கல்வி அமைச்சர் தமிழ்நாட்டு எம்.பிக்களையும் தமிழ்நாட்டு மக்களையும் நாகரிகமாற்றவர்கள் என்று விமர்சித்ததற்கு கண்டனம் தெரிவித்தார். மணிப்பூரில் பெண்களுக்கு நடந்த அவலங்கள், ஆயுதக் கடத்தல், போதைபொருட்கள் புழக்கம், வன்முறை என அங்கு நடந்த அனைத்து அத்துமீறல்களையும் ஒன்றிய பாஜக அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததுதான் பாஜகவின் நாகரீகம் என்று தக்க பதிலடி கொடுத்தார். அதோடு உலகத்திற்கே நாகரிகத்தை கற்றுக் கொடுத்தவர்கள் தமிழர்கள் என்றும் பெருமையாக கூறினார்.

## விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# திண்டிவனம் நகராட்சி 28வது வார்டில் நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார்!

*திண்டிவனம், மார்ச் 13 -*

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திண்டிவனம் நகராட்சி 28வது வார்டில் உள்ள 1000 குடும்ப அட்டைதாரர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திண்டிவனம் நகராட்சி 28 வது வார்டில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி சஞ்சிவிராயன் பேட்டையில் நடைபெற்றது.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர் சந்திரன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1000 மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் Hot Box உடன் கூடிய பிரியாணி உள்ளிட்டநலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சேது நாதன், மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார்,

நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், பழனி, முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன், நகர மன்ற உறுப்பினர்கள், நகரத் துணைச் செயலாளர் கௌதமன், வார்டு நிர்வாகிகள் சேகர், செல்வராஜ், செல்வேந்திரன், அரிகிருஷ்ணன், சுரேஷ், சண்முகம் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்72 வது பிறந்த நாளை முன்னிட்டு திண்டிவனம் நகராட்சியில் ஆயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் சேது நாதன், ரமணன், ரவிக்குமார், ஆசிரியர் கண்ணன், மணிமாறன், நிர்மலா ரவிச்சந்திரன், கவுன்சிலர் சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## க.தேவராஜ் எம்.எல்.ஏ. பங்கேற்பு! அ.செ.வில்வநாதன் எம்.எல்.ஏ. தலைமை!

# ஆம்பூரில் மாபெரும் தி.மு.க. பொதுக்கூட்டம்!

## டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. – என்.அண்ணாதுரை எம்.பி. – அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. – தக்கோலம் தேவபாலன் சிறப்புரை!

*திருப்பத்தூர், மார்ச் 13 -*

திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி வீராங் குப்பத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி, மாபெரும் தி.மு.க. பொதுக்கூட்டம் இன்று (13.03.2025 - வியாழக்கிழமை) நடக்கிறது.

கூட்டத்திற்கு ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினரும் மாதனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான அ.செ.வில்வநாதன் தலைமை தாங்குகிறார்.

விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் வீராங்குப்பம் மு. பழனி அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் கே .ராஜேந்திரன் எம். மேகநாதன் கோ.எழிலரசன், பார்த்திபன், ஜி .மதன் குமார், எஸ்.மகி சா.சங்கர், பி.கௌரி, பழனி பி.காசி ஆர்.முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் .

நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் க தேவராஜ் எம்.எல்.ஏ ,வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி. என் அண்ணாதுரை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, தலைமைக் கழக பேச்சாளர் தக்கோலம் தேவபாலன், ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் முத்தமிழ் செல்வி, கே.புருஷோத் தமன் ,மாநில தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் தொகுதி பார்வையாளர் டி .எம் .முனிவேல் சீனிவாசன் மாவட்ட துணை செயலாளர்கள் டி.கே.மோகன் , ஆ.சம்பத்குமார் சாந்தி சீனிவாசன் மாவட்ட பொருளாளர் கே .பி .ஆர். ஜோதி ராஜன் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் என். கே.ஆர் சூரியகுமார், நகர கழக செயலாளர்கள் எம் . ஆர். ஆறுமுகம், வி.எஸ். சாரதி குமார் எஸ்.ராஜேந்திரன் ப.ச.சுரேஷ்குமார் திருப்பதி, அசோக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ. ராஜமாணிக்கம், சி.சத்யமூர்த்தி, ஆர்.டி.சாமுவேல் செல்லபாண்டியன், செல்வராஜ், குமார், சந்திரன் ஆம்பூர் நகராட்சி தலைவர் ஏஜாஸ் அஹமது, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விவீ.வடிவேல் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தே. பிரபாகரன், கலை இலக்கிய அணி அமைப்பாளர் சி.குணசேகரன், ஆம்பூர் துத்திப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் சுவிதா கணேஷ், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் மு.க.அருள்நிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசுகிறார்கள். முடிவில் ஒன்றிய குழு உறுப்பினர் டி.காயத்ரி துளசிராமன் நன்றி கூறுகிறார்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமாரின் ஏற்பாட்டில் கலையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் அதனுடன் கைப்பையும் வழங்கினார்.